ஆணையர் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு / நில நிர்வாக ஆணையர் (முகூபொ)
அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை திரு பங்கஜ் குமார் பன்சால், இ.ஆ.ப.,

ந.க.எண்.RR/ஐ1/714573/2020 நாள் 10.11.2020

பொருள் நில எடுப்பு – நதிநீர் இணைப்பு திட்டம் – திருநெல்வேலி மாவட்டம் – பாளையங்கோட்டை வட்டம் – செங்குளம் கிராமம் – புல எண் 1/1சி மற்றும் சில – 17.79.28 ஹெக்டேர் புன்செய் நிலம் தாமிரபரணி ஆற்றில் உபரி வெள்ள நீரை கொண்டு செல்லும் – தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிகள் இணைப்புத்திட்டம் – நில ஆர்ஜித பணிக்கு நிலம் கையகப்படுத்துதல் – RFCTLARR Rules 2017–ன்கீழ் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்தல் செயல் திட்ட வரைவு அறிக்கை மாநிலக்குழுவால் ஒப்புதல் – தொடர்பாக.

படிக்க 1. அரசாணை (நிலை) எண் 304, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்(நிஎ–1(1)) த்துறை, நாள் 20.9.2017.
2. மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி கடித எண் ஜே3/54486/19, நாள் 20.10.2020.

////////

<u>உத்திரவு–</u>

பார்வை 2–ல் காணும் கடிதத்தில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், செங்குளம் கிராமம், புல எண்கள் 1/1சி மற்றும் பிறவற்றில் 17.79.28 ஹெக்டேர் புன்செய் நிலத்தில் தாமிரபரணி ஆற்றின் உபரி வெள்ளநீரை கொண்டு செல்லும், தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிகளை இணைப்புத்திட்டத்தினை மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசனப்பயன் திட்டத்தின்கீழ் நில எடுப்பு பணிகள் செய்யப்பட உள்ளதால், 2013–ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலின் நியாயமான இழப்பீடு, ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு, 2013 பிரிவு 17(2)–ன்கீழ் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு செயல்திட்ட வரைவினை அங்கீகரிக்க மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி கோரியுள்ளார்.

2. மாவட்ட ஆட்சியரின் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்தல் செயல் திட்ட வரைவு அறிக்கை முன்மொழிவில், 1.12.2010 அன்றே கேட்புத்துறையினரால் நில உரிமையாளர்களிடமிருந்து சம்மதக் கடிதம் பெறப்பட்டு முன்நுழைவு செய்யப்பட்டு கால்வாய் தோண்டப்பட்டுவிட்டது எனவும், கால்வாய் தோண்டப்பட்ட இடங்களில் குடும்பங்கள் ஏதும் (Project Displaced Families) இடமாற்றம் செய்யப்படவில்லை எனவும், மேற்படி புல எண்களின் பட்டாதாரர்களில், சில பட்டாதாரர்கள் சொந்தமான விவசாயம் செய்பவர்களாகவும், விவசாய கூலித்தொழில் செய்பவர்களாகவும், சுயதொழில் செய்பவர்களாகவும், சில பட்டாதாரர்கள் அரசு வேலையில் உள்ளதாக தெரியவருகிறது. மேலும், சில பட்டாதாரர்களின் நிலங்களில் பகுதி விஸ்தீரணம் மட்டும் கையகப்படுத்தப்படுவதாகவும், சில நிலங்கள் முழுமையாக கையகப்படுத்தப்படுவதாகவும், சில நில உரிமையாளர்களுக்கு செங்குளம் தவிர இதர கிராமங்களில் சொந்தமாக நிலம் இருப்பதால் தனியார்களின் முதன்மை வாழ்வாதாரம் எதுவும் பாதிக்கப்படவில்லை. எனவே, இந்நில எடுப்பினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் (Project Affected Families) எதுவுமில்லை என்பதால், நில உரிமைதாரர்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு செயல்திட்ட வரைவில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு எதுவும் வழங்கத்தேவை ஏற்படவில்லை என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

3. மேற்காணும் மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை பரிசீலனை செய்ததில், இந்நில எடுப்பினால் பாதிக்கப்படும் குடும்பங்கள் ஏதும் இல்லை என்பதாலும், இடமாற்றம் செய்யப்பட வேண்டிய தேவை ஏற்படவில்லை என்பதாலும், பாதிக்கப்பட்ட பகுதியில் இருக்கும் மரங்கள்/ கட்டிடங்கள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏதுமில்லை என்பதாலும், கையகப்படுத்தப்பட உள்ள நிலங்களில் வணிக / வியாபார ஸ்தலங்கள்

ஏதும் இல்லை என்பதாலும், கையகப்படுத்தப்பட உள்ள நிலங்களின் நில உரிமைதாரர்களில் பட்டியல் இனத்தவர் / பட்டியல் பழங்குடியினர் / மாற்றுத்திறனாளி நபர்கள் எவரும் இல்லை என்பதாலும், நில உரிமையாளர்கள் தங்களது வாழ்க்கை தொழிலுக்காக கையகப்படுத்தப்படும் நிலங்களை மட்டுமே வாழும் நிலைமையில் இல்லை. நில உரிமைதாரர்களுக்கு வாழ்வாதாரத்திற்கான இதர சொத்துக்கள் உள்ளன. மேலும், நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் எவருமில்லை எனத் தெரியவருகிறது.

4. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், செங்குளம் கிராமம், புல எண்கள் 1/1சி மற்றும் பிறவற்றில் 17.79.28 ஹெக்டேர் புன்செய் நிலத்தில் தாமிரபரணி ஆற்றின் உபரி வெள்ளநீரை கொண்டு செல்லும், தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிகளை இணைப்புத்திட்டத்திற்கு நில உரிமைதாரர்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைக் கூறுகள் எதுவும் வழங்கத்தேவையில்லை எனத் தெரிவித்த மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை ஏற்று மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு செயல்திட்ட வரைவினை அங்கீகரித்து உத்திரவிடலாம்.

5. மேலும், RFCTLARR Act, 2013-ன் பிரிவு 18 மற்றும் TNRFCTLARR Rules, 2017-ன் விதி 30-ல் தெரிவித்துள்ளவாறு மேற்படி, ஒப்புதல் அளித்த மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு செயல்திட்ட விவரங்களை கிராம நிர்வாக அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். மேலும், மாவட்ட இணையதளத்திலும் பதிவேற்றம் செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/—எஸ் நாகராஜன்
ஆணையர் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு
/ நில நிர்வாக ஆணையர் (முகூபொ)—க்காக

பெறுநர்
மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மாவட்டம்.

10/11/20
ஆணையர் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு
/ நில நிர்வாக ஆணையர் (முகூபொ)—க்காக

10/11/2020.